# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-6, இதழ்-1, நவம்பர்- 2012 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிக்கை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

**[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]**

# ஸயாஜி ஊ பா கின் அவர்களுக்கு நன்றி

**(திரு. சத்திய நாராயண கோயங்கா)**

*(10 ஜனவரி 1999, தம்ம கிரியில், திரு. ச.நா. கோயங்கா அவர்கள் ஆண்டு மாநாட்டில் அளித்த முடிவுரை)*

எனது அன்பார்ந்த தம்ம தியானிகளே:

இந்த ஆண்டு கூட்டத்தில் நாம் மீண்டும் கூடியுள்ளோம். இந்த ஆண்டு மிகவும் முக்கியமான ஆண்டாகும். இந்த ஆண்டு மாபெரும் இல்லறத் தூயவரான ஸயாஜி ஊ பா கின் அவர்களின் நூற்றாண்டாகும். அவரது நினைவாக நாம் கடினமாக உழைத்தாக வேண்டும்.

நாம் பல நினைவுச் சின்னங்களையும், பல நினைவிடங்களையும் அமைக்கலாம். அவ்வாறு செய்வதில் தவறேதும் இல்லை. ஆனால், தனிநபர் ஒருவரே மிக பெரிய நினைவிடமாகும். நீங்கள் ஒவ்வொருவரும் நினைவிடம் தான். "இவர் ஸயாஜி ஊ பா கின் அவர்களிடமும் அவரது வழி மரபிடமும் தம்மத்தைப் பெற்ற விபஸ்ஸனா தியானி ஆவார். ஓ! அது எவ்வாறு மக்களை மாற்றுகிறது! இந்த நபர் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளார்!" என்று மக்கள் உங்களை தெரிந்துகொள்ளும் அளவிற்கு நீங்கள் உங்களை தம்மத்தில் வளர்த்துக்கொள்ளுங்கள். இது தான் மாபெரும் நினைவுச் சின்னமாகும்.

எல்லோரும் அவரவரின் சொந்த நலனிற்காக இதனை செய்ய வேண்டும். நீங்கள் தம்மத்தில் முன்னேறுவது ஸயாஜி ஊ பா கின் அவர்களுக்காக அல்ல. நிச்சயமாக, அவர்மீது உங்களுக்கு உள்ள நன்றியுணர்வை வெளிப்படுத்த நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்; அதே நேரத்தில், மக்கள் இப்பாதையில் வர ஊக்குவித்து அவர்கள் துன்பத்திலிருந்து விடுபடவும் நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்.

இந்த பாரம்பரியத்தில் இருக்கும் ஒவ்வொரு தியானியும் செய்ய வேண்டிய இரு முக்கியமான செயல்கள் இருக்கின்றன. முதலாவதாக, தூய தம்மத்தில் நீங்கள் நிலைபெற முழு ஈடுபாடுடன் முயற்சி செய்யுங்கள். தூய தம்மம் என்னவென்பதை முழுமையாக தெரிந்து கொள்ளுங்கள்:

தீய செயல்களிலிருந்து விலகி இருத்தல், நற்செயல்களைச் செய்தல், மனதை தூய்மையாக்குதல் (மேல்மட்ட மனம் மட்டும் அல்லாமல், முழு மனதையும் தூய்மையாக்குதல்)

இவ்வளவு தான். இதில் தம்மம் முழுவதும் அடங்கியுள்ளது. அதில் கூட சேர்ப்பதற்கோ அல்லது அதிலிருந்து வெளியே எடுப்பதற்கோ எதுவுமில்லை, *பரிபுண்ணங், பரிஸுத்தங்*. நான் எவ்வாறு என்னையே தம்மத்தில் நிலைபெற்றுக் கொண்டு மற்றவர்களுக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக உருவாவது?

இரண்டாம் செயல்: இந்த தூயவரின் உன்னத நோக்கத்தை, குறிக்கோளை எவ்வாறு நிறைவேற்றுவது? எப்பேர்ப்பட்ட ஒரு வலிமையான தம்ம நோக்கம் அவரிடம் இருந்தது! "நாம் பெற்ற இந்த விலைமதிப்பற்ற இரத்தினம் தோன்றிய நாட்டிற்கு நான் நன்றிக் கடன் செலுத்த வேண்டும். இன்று, அந்த நாட்டில் என்ன நிகழ்கிறது?" அவர் செய்தித்தாள்களை படிக்கும் பொழுதும், இந்த நாட்டின் நிலை குறித்து அவர் எங்களிடம் கலந்துரையாடும் பொழுதும், அவர் எந்த அளவு கருணைமிக்கவர் என்று எங்களால் பார்க்க முடிந்தது.

"ஓ, புத்தர் தோன்றிய இந்நாட்டில், தூய தம்மம் தோன்றிய இந்நாட்டில், என்ன நடந்துகொண்டிருக்கிறது? மக்கள் தம்மத்தின் பெயரில் சண்டையிட்டுக் கொள்கின்றனர். 'எனது மதம், உனது மதம்' என்று அனைத்து விதமான பிரிவினைவாதங்கள். இன மோதல்கள், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற அடிப்படையில் சாதி பிரச்சனைகள். இந்த நாட்டில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றது? இந்த நாட்டிற்கு நன்றி கடன் செலுத்த வேண்டியது எனது கடமையாகும். இந்த அற்புதமான தம்மம் அவர்களுக்கு கிடைக்குமானால், நாடு முழுவதும் துன்பத்திலிருந்து வெளிவந்துவிடும். வேறு வழி ஏதும் கிடையாது. சாதி மோதல்களும், இன மோதல்களும், பிரிவினைவாதங்களும் இருக்கும் வரையில், துன்பமே நிலவும், துன்பம் மட்டுமே இருக்கும். இவர்களுக்கு தூய தம்மமும் விபஸ்ஸனாவும் கிடைத்தால் மட்டுமே இவை அனைத்தையும் அழித்தொழிக்க முடியும்.

"இதுவே அதற்குரிய நேரம். ஒருமுறை அது இந்தியாவிற்குச் சென்றால் போதுமானது. அதிகம் புண்ணிய பாரமீகளைக் (நற்பண்புகளை) கொண்ட மக்கள் இப்பொழுது இப்பூமியில் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் உன்னிடம் வருவார்கள். அவர்கள் அனைவரும் தம்மத்தை சுவைப்பார்கள்." என்று அவர் கூறுவதுண்டு.

"அந்த நாட்டில் யார் இதனை ஒப்புக்கொள்ளப் போகிறார்கள்? யாருக்கு என்னைத் தெரியும்? எவ்வாறு தம்மம் ஏற்றுக்கொள்ளப் படும்?" என்று நான் ஐயம் கொண்டேன். "கவலை வேண்டாம். காலம் கனிந்துள்ளது. மிக நல்ல பாரமீகளைக் கொண்ட மக்கள் அங்கு உள்ளனர். அவர்கள் தாமாகவே வருவார்கள். 'விபஸ்ஸனா' என்று அவர்கள் கேட்டவுடனேயே அவர்களால் பொறுத்திருக்க முடியாது. அவர்கள் வந்து விடுவார்கள். நீ கவலைக் கொள்ள வேண்டாம். மேலும், ஒருமுறை அந்த நாடு தம்மத்தை ஏற்றுக்கொண்டு விட்டால், பிறகு, அது காட்டுத் தீ போல் தம்ம பூமியான அந்த நாட்டிலிருந்து உலகெங்கும் பரவும். முன்பும் கூட, இந்த நாட்டிலிருந்து தான் அது பரவியது. இப்பொழுது, மீண்டும் காலம் கனிந்துள்ளது. இந்த நாட்டிலிருந்து தான் அது பரவும். விபஸ்ஸனா மணி அடித்துவிட்டது." "நான் போக வேண்டும். நான் சென்று இந்த உன்னத பணியை செய்தாக வேண்டும்." என்று அவர் மிகவும் உற்சாகமாக இருந்தார். அவரால் செல்ல இயலவில்லை. ஆனால், நான் இங்கு வந்த போது,. "இப்பொழுது எனது தம்ம புதல்வன் என் பிரதிநிதியாக செல்வார். அவர் இப்பணியைச் செய்து வெற்றி கான்பார்." என்று அவர் மிகவும் மகிழ்ந்தார். "நீ வெற்றி கான்பாய், கவலை வேண்டாம்" என்று அவர் என்னிடம் கூறிக்கொண்டே இருந்தார்.

"நான் எவ்வாறு வெற்றி அடைய முடியும்?" என்று நான் என் மீதே ஐயம் கொண்டிருந்தேன். ஆனால், எப்படியோ, இந்த நாட்டிற்கு நான் வந்த ஒரு மாதத்திற்குள் முதல் விபஸ்ஸனா முகாம் அளிக்கப்பட்டது. அதன் பிறகு, முகாம் பின் முகாமாக, தம்மத்தின் கங்கை ஓடத் தொடங்கியது.

ஆகையால், தம்மம் தமது பிறப்பிடமான இந்த நாட்டில் மீண்டும் நிலைபெற்று அதன் பிறகு உலகெங்கும் பரவ வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும், குறிக்கோளாகும். துன்பம் எங்கும் நிலவுகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் துன்புறுகின்றனர்.

அவரது நினைவின் பேரில் நாம் நிறுவ வேண்டிய நினைவுச் சின்னம் என்னவெனில், முதலில், ஒவ்வொரு தனிநபரும் நினைவுச் சின்னமாக உருவாக வேண்டும். அதன் பிறகு, இப்பாதையில் மேலும் மேலும் மக்கள் வந்து பயனடைய பாடுபட வேண்டும்.

அவர்கள் துன்புறுகின்றனர். ஒரு முன்கோபி, அறிவளவில், “ஓ! இது எனக்கு நல்லதல்ல. நான் என்னையே துன்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறேன். நான் மற்றவர்களையும் துன்பத்தில் ஆழ்த்துகிறேன். நான் அதிலிருந்து வெளிவர வேண்டும்” என்று புரிந்து கொள்கிறார். எவ்வாறு வெளிவருவது? அதற்கு எந்த வழியும் இல்லை. தீய பழக்கங்களுக்கு அடிமையான ஒருவர், “இது எனக்கு நல்லது அல்ல. நான் வெளிவர வேண்டும். ஆனால், எவ்வாறு வெளிவருவது?” என்பதை நன்கு புரிந்து கொள்கிறார். தீய பழக்கங்களில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் மிகவும் மகிழ்வற்று இருக்கிறார். அவர் தமது வாழ்வை தீமையிலிருந்து நன்மைக்கு மாற்ற விரும்புகிறார். ஆனால் அதனை எப்படி செய்வது?

வெறும் சொற்பொழிவுகள் உதவாது. மக்கள் நல்ல சொற்பொழிவுகளைக் கேட்கின்றனர். அவர்கள் கண்ணுக்கு தெரியாத ஏதோவொரு சக்தியிடம் ஏதோ அதிசயத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இது உதவாது. ஒவ்வொருவரும் தங்களுடைய முக்திக்கு பாடுபட வேண்டும். ஆனால், எப்படி? கண்மூடித்தனமான நம்பிக்கைகள் ஏதுமில்லாத ஒரு பாதை இருக்கிறது என்பதை மக்கள் உணர வேண்டும். நீங்கள் பாடுபட்டால், உங்களுக்கு பயன் கிடைக்கும். பயன் கிடைத்த பின், நீங்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறீர்கள், நீங்கள் அதனை நம்புகிறீர்கள். ஆனால், முதலில், பாடுபடுங்கள். உங்களுக்கு பயன் நிச்சயம் கிட்டும். இயல்பாகவே, நீங்கள் நம்பிக்கையை, சிரத்தையை வளர்த்துக் கொள்வீர்கள். அதன் பின், அடுத்த அடியை எடுத்து வையுங்கள். அடி மேல் அடி வைத்து, நீங்கள் இறுதி இலக்கை அடைகிறீர்கள்.

பல வகையான சடங்குகளிலும், தத்துவ நம்பிக்கைகளிலும் ஈடுபடுகின்ற ஒரு சில சமுதாய மக்களிடம் சில நேரங்களில் புத்தர் கூறுவதுண்டு. அவர்களது குறிக்கோளும் பிறப்பு இறப்பு சுழலிலிருந்து வெளிவருவது தான். “இது தான் உங்களது குறிக்கோளா?

“ஆம்”

“அப்படியெனில், உங்களது வாழ்வின் ஏழு நாட்களை எனக்கு தாருங்கள். வெறும் ஏழு நாட்கள் மட்டுமே. நான் உங்களை எனது சீடர்கள் ஆக்கிக்கொள்ள இங்கு வரவில்லை. எனக்கு அதில் ஆர்வமுமில்லை. உங்களது குருவிடமிருந்து உங்களை பறிக்க நான் இங்கு வரவில்லை. நீங்கள் நான் சொல்வதை எல்லாம் நம்ப வேண்டும் என்று கட்டளையிடவும் இங்கு வரவில்லை. ஒருமுறை சோதனை செய்து பார்த்து என்ன பலன் கிடைக்கிறது என்பதை உணருங்கள். சோதித்து பாருங்கள்.” என்று அவர் கூறுவதுண்டு.

இதுவே தம்ம வழியாகும். ஒரு பாதை இருக்கிறது என்று மக்களுக்கு தெரிந்தால், வெறும் அதைப் பற்றி கேட்டாலும் போதும், அவர்கள் அதனை ஒருமுறை சோதித்தாலும் பலன் உடனேயே வருகிறது. இது ஒரு பலன்-சார்ந்த பயிற்சி முறையாகும். இப்போது நீங்கள் பயிற்சி செய்யுங்கள், இறப்பிற்கு பின்பு உங்களுக்கு பலன் கிடைக்கும் என்பது போன்ற முறை இது அல்ல. அவ்வாறு இருந்தால், அது தூய தம்மமாகாது. அதில் ஏதோ கண்மூடித்தனமான நம்பிக்கை இருக்கக்கூடும். இறப்பிற்கு பின் ஏதோவொரு பலன் கிடைக்கும். ஆனால், அந்த ஏதோவொரு பலன் இப்போதே நிகழத் தொடங்க வேண்டும். “இப்பொழுதே, நான் முன்னேறுகிறேன், முன்னேறிக் கொண்டேயிருக்கிறேன். மரணத்திற்குப் பின்னும் நான் நிச்சயம் முன்னேறுவேன்.” பலன் இப்பொழுது இல்லையெனில், அது தம்மம் ஆகாது.

புத்தருடைய காலத்திலும் இது இவ்வாறே பரவியது. இவ்வாறு தான் அது பரவ வேண்டும் என என் தம்மத் தந்தையும் விரும்பினார். “நீ ஏன் கவலை கொள்கிறாய்? இந்தியாவிலும் உலகத்திலும், மிக நல்ல பாரமீகளைக் கொண்டோர் இருக்கிறார்கள். முதலில், நீ இந்தியாவில் வேலை செய்ய வேண்டும். நீ அங்கு சென்றவுடன் அந்த மக்கள் வரத் தொடங்குவர். ‘வாருங்கள், வாருங்கள்’ என்று நீ அவர்களை அழைக்கத் தேவைப்படாது. ‘விபஸ்ஸனா’ என்று கேட்டவுடனேயே, அவர்களுள் ஏதோவொன்று நிகழும்: ‘ஓ! நான் ஒருமுறை சோதனை செய்தாக வேண்டும், நான் செல்ல வேண்டும்’ என்று அவர்கள் நினைப்பார்கள். இவ்வாறு தான் உலகிலுள்ள மற்றவர்களும் நினைப்பர். நற்பாரமீகளைக் கொண்டோர் இப்பூமியில் மனிதர்களாக பிறப்பெடுத்துள்ள காலம் இதுவே. அவர்கள் தம்மத்தை ஏற்பார்கள். அவர்கள் தம்மத்தை பரப்புவார்கள்.” என்று ஸயாஜி கூறியுள்ளார். இதனை அவர் பெரிதும் நம்பினார்.

உண்மையில் அவ்வாறு தான் நடந்தது. நான் இங்கு வந்து ஒரு மாதத்திற்குள் ஒரு முகாம் நடைபெற்றது. ஆகவே, நானும் மிகுந்த நம்பிக்கைக் கொண்டவனானேன். ஆனால், நாம் ஏதோவொரு அதிசயம் நிகழு காத்திருக்க வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. நாம் பயிற்சி எதையும் செய்ய மாட்டோம், ஆனால், ஏதோவொரு அதிசயம் நிகழும், எல்லோரும் மாறிவிடுவர் என்றல்ல. அவ்வாறு நடக்காது. மக்கள் பயிற்சி செய்தாக வேண்டும். அவரவர் விடுதலைக்கு அவரவர்களே பாடுபட வேண்டும். தங்களை விடுதலை அடைய செய்ய ஒரு பாதையுள்ளது என்று தெரிந்தால் தான் மக்களும் சிரத்தையுடன் பயிற்சி செய்ய முடியும். மேலும், இப்பாதை கண்மூடித்தனமான நம்பிக்கைகள் ஏதுமில்லாத, ஒரு தர்க்க ரீதியான, அறிவியல் பூர்வமான, நடைமுறைக்கேற்ற பாதையாகும். இதில் விளைவுகள் உடனுக்குடன் கிட்டும். ஆனால், முதலில், அவர்கள் நம்பிக்கையுடன் இருந்தாக வேண்டும்.

ஆகவே, இப்படியோர் பாதை இருக்கிறது என்கிற செய்தி உலகெங்கும் சென்றடைய வேண்டும். தாம் துக்ககரமானவர் என்று உணர்பவர்க்கும், துக்கத்திலிருந்து வெளிவர விரும்பும் அனைவருக்கும் ஒரு பாதை இருக்கிறது, ஒரு பயிற்சி முறை இருக்கிறது. இது முக்தியின் பாதை என்று நாங்கள் சொல்வதால் நீங்கள் ஏற்றாக வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. ஒப்புக்கொள்ளாதீர்கள். ஆனால், ஒருமுறை சோதித்துப் பாருங்கள். “உங்கள் வாழ்வின் ஏழு நாட்களை எனக்கு அளியுங்கள்” என்று ஒரு புத்தர் கூறியதைப் போன்று, “உங்கள் வாழ்வின் பத்து நாட்களை எனக்கு அளியுங்கள். உங்களுக்கு நல்ல விளைவுகள் கிடைக்கிறதா என்பதை நீங்களே பாருங்கள்” என்று நாங்களும் கூறுகின்றோம்.

தம்மைத் தாமே கோயங்காவின் சீடர்கள் என்றோ அல்லது ஊ பா கின் அவர்களின் சீடர்கள் என்றோ கூறிக்கொள்வோர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் எங்களுக்கு ஆர்வமில்லை. அது அர்த்தமற்றதாகும்!. இந்த பாரம்பரியத்திலிருந்து அல்லது அந்த பாரம்பரியத்திலிருந்து மக்களைப் பறிப்பதும் எங்கள் நோக்கமல்ல. துன்பத்திலிருந்து வெளிவர வேண்டும் என்பது ஒரு உலகப் பொதுவான விருப்பமாகும். அந்த விருப்பம் நிறைவேற நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம். “இங்கு ஒரு பாதையுள்ளது. உங்களுக்கு அது நல்லது என தென்பட்டால், ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு அது நல்லதல்ல என தென்பட்டால், ஏற்காதீர்கள். ஆனால், ஒருமுறையாவது சோதனை செய்து பாருங்கள்.” அவ்வளவு தான். ஒரு முறையான மதத்தை நிறுவுவது எங்களது நோக்கமல்ல. தம்மம் என்பது முறையான மதங்களுக்கேல்லாம் அப்பார்ப்பட்டது. தம்மம் ஒரு முறையான மதமானால், அது தொலைந்து விடும். அந்த முறையான மதமே தழைத்தோங்கி விடும்.

ஆகையால், அதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. தூய தம்மம் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதமாக ஆகிவிடக் கூடாது என்பதில் ஒவ்வொரு விபஸ்ஸனா சாதகரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எல்லோரும் பயிற்சி செய்ய வேண்டும். நீங்கள் வேலை செய்யுங்கள், உங்களுக்கு பலன் கிடைக்கும். “நீங்கள் மிகவும் பலவீனமாக உள்ளீர்கள். எவ்வாறு நீங்கள் முக்தி அடைய முடியும்? வாருங்கள். என்னிடம் சரணடையுங்கள். என்னிடம் சரண் புகுங்கள். நான் உங்களை விடுவிப்பேன். முக்தி என் சட்டை பையில் தான் உள்ளது. நான் அதனை உங்களுக்கு அளிக்கிறேன்” என்று ஒருபோதும் ஒரு ஆசிரியர் கூறக்கூடாது. இம்மாதிரியான ஒன்று ஒருபோதும் தம்மத்தில் நிகழக் கூடாது. இப்பொழுதும் நிகழக்கூடாது, எதிர்காலத்திலும் நிகழக் கூடாது. இல்லையென்றால், தம்மம் தொலைந்துவிடும். எல்லோரும் பயிற்சி செய்தாக வேண்டும். சரியாக வேலை செய்தால், உங்களுக்கு பலனும் வரும். சரியாக பயிற்சி செய்யவில்லையெனில், பலனும் வராது.

ஆகவே, மிகவும் முக்கியமான விஷயம் என்னவெனில், “உங்களது துன்பத்திலிருந்து நீங்கள் வெளிவர ஒரு பாதை உள்ளது” என்ற அறிவை மக்கள் பெற வேண்டும். அவர்கள் சோதனை செய்ய ஏற்றுக்கொண்டு அதனை சோதித்தும் பார்த்து விட்டால், அதன் பிறகு,

அவர்கள் பாதையில் முன்னேற நம்மால் இயன்ற வரை உதவி செய்ய வேண்டும். அதற்காக என்ன வசதிகள் தேவைப்படும்? நாம் எவ்வாறு உதவ முடியும்? நாம் அந்நபரை எவ்வாறு ஊக்குவிக்க முடியும்? ஒருவர் தன்னால் இயன்ற வரை மற்றவர்கள் துன்பத்திலிருந்து வெளிவர உதவுகிறார். பஹுஜன ஹிதாய, பஹுஜன ஸுகாய, என்பதே நமது குறிக்கோளாகும். மேலும் மேலும் மக்கள் தம்மத்தின் பலன்களை பெற வேண்டும், அமைதியும் இசைவும் அடைய வேண்டும், துன்பத்திலிருந்து வெளிவர வேண்டும். அவ்வளவு தான்.

நாம் பிரிவினைவாதிகளாக ஆகக் கூடாது. எதிர்காலத்தில் ஒரு ஆபத்து இருக்கிறது: ஒரு விபஸ்ஸனா தியானியின் மகனோ அல்லது மகளோ "நான் ஒரு விபஸ்ஸீயின் குடும்பத்தில் பிறந்திருப்பதால், நான் ஒரு விபஸ்ஸீ ஆவேன்." என்று கூறலாம். இப்படி இன்னொரு இனமோ சாதியோ தோன்றலாம். "இது விபஸ்ஸீ சாதி. இவர்கள் எல்லாம் விபஸ்ஸீ வகுப்பை சேர்ந்தவர்கள்." இவர் விபஸ்ஸனாவை பயிற்சியும் செய்யமாட்டார், அதைப் பற்றி தெரிந்தும் இருக்க மாட்டார், ஆனால், விபஸ்ஸீ, விபஸ்ஸீ என்று கூறிக்கொள்வார். மிகப் பெரிய ஆபத்து. இப்பொழுதே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் வேலை செய்யவில்லையெனில், பலனும் இல்லை. "பாருங்கள், நாங்கள் பயிற்சி செய்கின்றோம். நீங்களும் செய்ய வேண்டும்." இவ்வாறு தான் நாம் தூயவரான ஸயாஜி ஊ பா கின் அவர்களுக்கு உண்மையான நன்றிக்கடனை செலுத்த முடியும்.

மற்றுமோர் மிக முக்கியமான விஷயம் என்னவெனில், இந்த அற்புதமான பயிற்சி முறை இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கும், பௌத்த நாடுகள் என்று கூறிக்கொள்ளும் நாடுகளிலும் தொலைந்துவிட்டது. இப்பொழுது நாம் அங்கு சென்று முகாம்கள் நடத்தும் பொழுது, அங்கு விபஸ்ஸனாவின் வார்த்தைகள் மட்டுமே உள்ளன. உண்மையான பயிற்சி, தூய்மையான பயிற்சி தொலைந்துவிட்டது. ஆகவேதான், அவர்களும் இதனை பெற்றுக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

காலம் இப்பொழுது கனிந்துவிட்டது. விபஸ்ஸனா மீண்டும் வரத் தொடங்கிவிட்டது. அது நீண்ட காலம் இருக்கும் படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மக்கள் இதன் தூய்மையை பாதுகாத்தால் மட்டுமே அது அவர்களுக்கு பணி புரிய முடியும். கலப்படம் செய்தால், அதன் செயல்திறனும் அகன்றுவிடும். செயல்திறன் போய்விட்டால், மக்கள் இப்பயிற்சிமுறைப் பற்றி கவனம் கொள்ளாமல் அதனை தொலைத்து விடுவார்கள். ஆகவே நாம் இதன் மீது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இத்தூயவரிடம் நாம் பெற்றதையும், அவர் இப்பாரம்பரியத்திடம் பெற்றதையும் நாம் அதன் தொன்மைத் தூய்மையில் பாதுகாக்க வேண்டும். நாம் பயிற்சியில் எதையும் சேர்க்க மாட்டோம். *கேவலங் பரிபுண்ணங்.* அது நிறைவானது. தம்மம் முழுவதும் அதில் அடங்கியுள்ளது. சேர்ப்பதற்கு என்ன உள்ளது? *கேவலங் பரிசுத்தங்.* எதையும் கழிக்கவும் கூடாது. தலைமுறை தலைமுறையாக நான் இதனை பாதுகாத்து வந்தால், இந்த துன்பமிகு உலகத்திலுள்ள எண்ணிலடங்கா மக்கள் தங்கள் துன்பங்களிலிருந்து வெளிவரத் தொடங்குவர். இதுதான் இந்த தூயவரின் இலட்சியமாகும். அவர் விரும்பியதும் இதுவே. இப்பொழுது விபஸ்ஸனாவின் மணி அடித்துவிட்டது. அது தொடங்கிவிடும் ஆனால் யாராவது அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். அது ஓர் அதிசயமாக தொடங்காது. அதற்காக யாராவது வேலை செய்தாக வேண்டும். யாரேனும் அதன் தூய்மையை பாதுகாக்க வேண்டும். இந்த ஆண்டு கூட்டத்தின் மூலம் சில விஷயங்கள் முக்கியமாக கருதப்பட வேண்டும். இந்த தூயவரிடம் நாம் நன்றியுணர்வை செலுத்த விரும்பினால், நாம் தம்மத்தில் நிலைபெற வேண்டும்.

இல்லையென்றால், நாம் மற்றவர்களை ஊக்குவிக்க முடியாது. ஒரு பார்வையற்றவர் இன்னொரு பார்வையற்றவர்க்கு உதவ முடியாது. நாம் முதலில் வலிமை பெற வேண்டும். பிறகு, பல வழிகளில், இவ்வுலகத்தில் துன்புறும் மக்களுக்கும் இம்மாதிரியான ஒரு பாதை உள்ளது என்ற செய்தியை பரப்ப வேண்டும்.

கடந்த முப்பது ஆண்டுகளிலும் கூட மிகச் சிறந்த பலன்கள் வந்துள்ளன. பலன் அளிக்கக்கூடிய மதச்சார்பற்ற ஒரு பாதை உள்ளது என்ற உண்மையை மக்கள் அறிய வேண்டும். இது ஒரு மனப் பயிற்சி முறை தான். நீங்கள் ஒரு உடற்பயிற்சியை செய்யும் பொழுது, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்திற்கும் மாறுவதில்லை. அதுபோலவே, இது ஒரு மனப் பயிற்சி முறைத் தான்; இதில் நீங்கள் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாற வேண்டியதில்லை.

"நீங்கள் நோயுற்று உள்ளீர்கள். அதிலிருந்து வெளிவர உங்களுக்கு மருந்து தேவை. மருந்தை எடுத்துக் கொண்டு துன்பத்திலிருந்து வெளிவாருங்கள்." இந்தத் தகவல் சென்றடைய வேண்டும். இந்த கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொருவரும், "எனது திறனையும், புத்திக் கூர்மையையும், வலிமையையும் பயன்படுத்தி இந்த செய்தி பல மக்களுக்கு எவ்வாறு நான் கொண்டு செல்ல முடியும்?" என்று சிந்திக்க வேண்டும்.

இரண்டாவதாக, "இப்பயிற்சி முறையை பயன்படுத்த விரும்புவோர்க்கு நாம் எவ்வாறு உதவியாக இருக்க முடியும்?, இந்த பயிற்சி முறையை மேலும் மேலும் மக்கள் பயன்படுத்திக் கொள்ள எனது திறனுக்கேற்ப, எனது தகுதிக்கேற்ப நான் என்ன செய்ய வேண்டும்? இப்பயிற்சி முறையில் மேன்மேலும் மக்கள் நிலைபெற என்னால் என்ன செய்ய முடியும்?"

மூன்றாவதாக, "நான் இப்பயிற்சி முறையின் தூய்மையை ஒருபோதும் கெடுக்க மாட்டேன். மேலும், என்னால் முடிந்த அளவு, இப்பயிற்சி முறையின் தூய்மையை கெடுக்க நான் எவரையும் அனுமதிக்கவும் மாட்டென், தூண்டிவிடவும் மாட்டேன், எவருக்கும் சாதகமாகவும் இருக்க மாட்டேன்."
தம்மம் உங்களுக்கு உதவ இருக்கிறது. தம்மம் இப்பொழுது உதவுவது போலவே எப்போதும் உதவிவரும். ஆனால், அதற்காக உங்களிடமிருந்து, "இந்த தூயவருக்கு நாம் நன்றிக்கடனை செலுத்தி ஆக வேண்டும். இவரால் தான் எனக்கு தம்மம் கிடைத்தது." என்றதொரு உறுதியான தீர்மானம் தேவைப்படுகிறது.

"ஓ, இவர் எண்ணிலடங்கா பிறவிகளில் தமது பாரமிகளை வளர்த்துக் கொண்டு கடுமையாக வேலை செய்யவில்லை என்றால், இந்த அற்புதமான பாதையை அவரால் கண்டுபிடிக்க முடிந்திருக்காது. அவர் இப்பாதயை கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால், எனக்கு அது எவ்வாறு கிடைத்திருக்கும்?" என்ற ஒரு ஆழமான நன்றி உணர்வு புத்தர் மீது நமக்கு உள்ளது. அவ்வாறே, இப்பயிற்சியின் தூய்மையை பாதுகாத்து வந்த வழிமரபின் மீதும், இந்த வலிமையான தம்ம நோக்கத்தைக் கொண்டிருந்த ஸயாஜி ஊ பா கின் அவர்கள் மீதும் ஒரு ஆழமான நன்றியுணர்வு நம்முள் இருக்கிறது.

தூய தம்மம் உலகெங்கும் பரவட்டும். மேன்மேலும் துன்புறும் மக்கள் தம்மத்திடன் தொடர்பு கொண்டு தம்மத்தை வாழ்வில் பயன்படுத்தி துன்பங்கள் அனைத்திலிருந்தும் விடுதலை பெருவார்களாக.

**நினைவாஞ்சலி:** துணை ஆசிரியரான திரு. மோகன கிருஷ்ணன் அவர்கள் கடந்த மாதம் தமது 82-வது வயதில் காலமானார். அவர் பல முகாம்கள் தம்ம சேது விபஸ்ஸனா தியான மையத்திலும், பல முகாம்கள் தமிழகத்தின் மற்ற இடங்களிலும், குறிப்பாக சிறைச்சாலைகளிலும் நடத்தியுள்ளார். அவர் மகிழ்வுடன் இருப்பாராக, அமைதியுடன் இருப்பாராக, முக்தி பெறுவாராக!

**RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07**
**REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/11-13**

## தகவல் தொலைபேசி எண்கள்

**தம்ம சேது அலுவலக எண்கள்** (காலை 10:00 - மதியம் 1:00, மதியம் 2:00 - மாலை 5:00): 944428**0952**, 944429**0953**
**முகாம் முன்பதிவு மற்றும் தகவல்களுக்கு**: 9444280952, 9444290953, 9940467453, 9442287592, 9444462583, 9042632889, 8015756339
**குழந்தைகள் முகாம்**: 8148135795,
**இணையதளம் மூலம் பதிவு:** http://courses.dhamma.org/en/schedules/schsetu
**மின் அஞ்சல்:** setu.dhamma@gmail.com

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவணை: 2012~2013

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 9444290953, 9444280952

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | 1-நாள் | சிறுவர் முகாம் |
|---|---|---|---|---|---|---|---|
| நவம்பர் | 14-25 | | | | 29-2 (டிச) | 4 | 11, 25 |
| டிசம்பர் | 5-16, 19-30 | | | | | 2 | 30 |
| **ஜனவரி 2013** | **2-13, 16-27** | | | | **30-2 (பிப்)** | **6** | |
| பிப்ரவரி | 20-3 | 2-10 | | | 14-17 | 3 | 17 |
| மார்ச் | 6-17, 20-31 | | | | 21-24 | 3 | |
| ஏப்ரல் | 10-21, 24-5 (மே) | | | | 4-7 | 7 | 21 |
| மே | 15-26 | | | | 9-12<br>30-2(ஜூன்) | 25 (புத்த பௌர்ணமி) | 5,12,26 |
| ஜூன் | 5-16 | 22-30 | | | 19-22 | 2 | 16 |
| ஜூலை | 3-14, 17-28 | | | | 18-21 | 7<br>22 (குரு பௌர்ணமி) | 14,28 |
| ஆகஸ்டு | 31 (ஜூலை)-11<br>14-25 | | | | 28-31 | 4 | 11,25 |
| செப்டெம்பர் | 11-22 | 31 (ஆக)-8 | | | 12-15 | 1 | 22 |
| அக்டோபர் | | | 26 (செப்)-17 | 26 (செப்)-27 | 30-2(Nov) | 6 | |
| நவம்பர் | 6-17, 20-1 (டிச) | | | | 21-24 | 3 | 17 |
| டிசம்பர் | 4-15, 18-29 | | | | | 1 | 1,29 |

### தமிழகத்தின் மற்ற இடங்களில் 10-நாள் தியான முகாம்:

| | தேதி | இடம் | தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1 | 29 நவம்பர் - 10 டிசம்பர் 2012 | பிரபஞ்ச அமைதி ஆசிரமம், நல்லகவுண்டம் பாளையம், பதுவம்பள்ளி, கருமத்தம்பட்டி-அன்னூர் சாலை, கோவை (ஆண்கள் மட்டும்) | 1. திரு. அரவிந்த் வீரராகவன் - 8148135795<br>2. திரு. பரத் ஷா - 9842347244<br>3. திரு. சிவாத்மா - 9842280205 |
| 2 | 20-31 ஜனவரி 2013 | இதயா ஆசிரமம், அரியாங் குப்பம், புதுவை | 1. திருமதி. விஜயலட்சுமி 9940467453, 9444112771<br>2. திரு. குப்தா 9443038269<br>3. திரு. சீதாராமன் 9843044303 |

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on: 12/11/2012
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

அனுப்புனர்: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☏: 944429**0953**, 944428**0952**
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vri.dhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org